DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **தனலட்சுமி** (P.w. 2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of November 2025

( 2, 4 எதிரிகள் ஆஜர் . 3வது எதிரி இறப்பு )

**முதல் விசாரணை :–**

நான் தர்மம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் முத்துப்பாண்டியின் மகன் அர்விந்த் பனைமரத்தில் நொங்கு வெட்டினார். நான் ஏன் என் பனையில் நொங்கு வெட்டினாய் என்று கேட்டேன். அதற்கு அர்விந்த் பொது இடத்தில் வெட்டினால் உனக்கு என்ன என்னடி என்று அசிங்க அசிங்கமாக பேசினார். அந்த வார்த்தைகளை என்னால் சொல்லமுடியாது. எனது கணவர் அதற்கு கட்டனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார். அதை மனதில் வைத்துக் கொண்டு முத்துப்பாண்டி, முத்துக்குமார், அர்விந்த், பாலு ஆகியோர் அசிங்கமான வார்த்தைகளால் பேசிக்கொண்டே கல்லைக் கொண்டு எறிந்தார்கள். முத்துப்பாண்டி கல்லை கொண்டு எனது அடிவயிற்றில் எறிந்தார். அதில் நான்

வலியில் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன். முத்துராமுதான் என்னை மருத்துவமனைக்கு தூக்கிக் கொண்டு போனார். முதலில் நரிக்குடி மருத்துவமனையில் சிகிச்சை பார்த்துவிட்டு பின்பு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தோம். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த அறிவேன் சாட்சி கையொப்பம் அதசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எ.த.கு.வி—**

சம்பவம் நடந்தவுடனே நரிக்குடி மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம் என்றால் நான் மயக்கமாகிவிட்டேன் என்னை தூக்கி சென்றுவிட்டார்கள். எனக்கு நரிக்குடி மருத்துவமனையில் ஊசி போட்டார்கள். அங்கிருந்து எவ்வளவு நேரம் கழித்து அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் 1/2 மணிநேரத்தில் 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்றோம். அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்றவுடன் சம்பவம் நடந்த அன்றே சென்று மருத்துவரிடம் நடந்த விபரத்தை சொன்னோமா என்றால் சொல்லிவிட்டோம். கல் எவ்வளவு பெரியது அது கருங்கல்லா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதனை மருத்துவரிடம் கல்லை எறிந்த விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். கட்டனூரில் இருந்து போலிசார் எப்போது விசாரணை செய்ய வந்தார்கள் என்றால் மாலை நேரத்தில் வந்தார்கள். போலிசார் விசாரணையின்போது கையொப்பம் செய்தேனா என்றால் கையாப்பம் செய்தேன். எத்தனை கையொப்பம் செய்தேன் என்று ஞாபகமில்லை. வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவ மே நடக்கவில்லை என்றாலும் வயோததித்தின் காரணமாக கால் இடறி தவறி கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்துக் கொண்டு இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதாலும் 1வது எதிரியையும், அவரது குடும்பத்தார்களையும் பழி வாங்கும் நோக்கத்தோடு பொய் புகார்

கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியின் தாய் 1ம் எதிரியை நானும் எனது கணவரும் அசிங்கமாக பேசி சத்தம் போட்டதாகவும் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிடுவார்கள் என்று பயந்து காவல் நிலையத்தில் பொய்யாக கொடுக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும்போது 10 பேர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள், அவர்களை விசாரித்தால் உண்மை தெரியவருமா என்றால் உண்மை தெரியவரும். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | அம்பலவாணன் (P.w. 1) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of November 2025

( 2, 4 எதிரிகள் ஆஜர் . 3வது எதிரி இறப்பு )

**முதல் விசாரணை :–**

நான் தர்மம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 20.05.2023ம் தேதியன்று காலை 10.00மணியளவில் நான் நொங்கு வெட்டுவதற்கு சென்றிருந்தேன். அப்போது முத்துப்பாண்டியின் மகனான இளவர் அர்விந்த் மரத்தில் ஏறி இருந்தார். நான் அவரிடம் மரத்தில் ஏன் ஏறினாய் என்று கேட்டதற்கு இது என்ன உங்க அப்பன் வீட்டு மரமா கம்மாக்கரையில் தானே இருக்கிறது என்று போடா, நொம்மா, நோத்தா என்று அசிங்கமாக பேசினார். பின்பு போடா புண்ட மவனே என்று என்னை அடித்து பால்ச்சாமி , முத்துக்குமார், சத்தியேந்திரனும், அர்விந்தும் கீழே தள்ளினார்கள். அதற்கு நான் கட்டனுார் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அதற்கு எதிரிகள் மற்றும் இளவரும் காவல் நிலையத்திற்கு வந்தார்கள். அப்போது

அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதன்பின்னர் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். எதிரிகளும், இளவரும் எங்கள் வீட்டிற்கு எதிரில்தான் வசித்து வருகிறார்கள். அவர்கள் நால்வரும் அன்றைய தினம் இரவு 8.00மணியளவில் மது அருந்திவிட்டு குடிபோதையில் வந்து என்னையும், எனது மனைவியையும் எதிரிகள் புண்ட மவனே என்று அசிங்கமாக பேசி கல்லை எங்கள் மீது எறிந்தார்கள். அதில் சத்தியேந்திரன் எறிந்த கல்லானது எனது மனைவிக்கு அடிவயிற்று பகுதியில் பட்டது. அதில் எனது மனைவி மயங்கிவிட்டார். அதன்பின்னர் அவரை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனுவினை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரணையில் கொடுத்தேன். எனது மனைவி படுக்கையில் இருந்தார், நானும் அவரோடு இருந்தேன். எனக்கும் காயம் ஏற்ப்பட்டிருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள். (**அந்த புகார் மனு அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எ.த.கு.வி –**

தனலட்சுமி எனது மனைவி என்றால் சரிதான். தினேஷ் , ராசு, முத்துக்குமார் ஆகியோர் உறவினர்கள் என்றால் எனது ஊர்க்காரர்கள். ராசுவும், தினேஷும் சம்பவத்தின்போது இல்லை. முத்துராமுவும் ஊரில் தான் இருந்தார். அவர் தான் ஆட்டோவில் மருத்துவமனைக்கு ஏற்றிச் சென்றார். சண்டையில் மயங்கி கிடந்தபோது அவர்தான் வந்து ஆட்டோவில் ஏற்றினார். எனது வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் 5 கிமீ துாரம் இருக்கும். தர்மத்தில் இருந்து நரிக்குடி வழியாக திருச்சுழி வந்துதான் அருப்புக்கோட்டை மருத்துவமனைக்கு செல்லமுடியும் என்றால் சரிதான். எனக்கு 5 கிமீ துாரத்தில் கட்டனுார் அரசு மருத்துவமனையும், அருப்புக்கோட்டை செல்லும் வழியில் நரிக்குடி மற்றும் திருச்சுழி அரசு

மருத்துவமனை உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு கட்டனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. நரிக்குடி மற்றும் திருச்சுழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் நரிக்குடி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க முடியாது என்று எழுதிக் கொடுத்தார்களா என்றால் ஆமாம், அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அன்றைய தினமேபோலிசார் வந்தார்களா என்றால் மறுநாள் காலை 10.00மணிக்கு மேல் போலிசார் வாக்குமூலமாக வாங்கினார்கள். எனது முதல் விசாரணையில் எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டியதாக சொன்ன வார்த்தைகளை போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் அது எனது வாக்குமூலம் கிடையாது என்றால் சரியல்ல.பனைமரம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பா வைத்த மரம் ஆகும். அதற்கு பட்டா உள்ளதா என்றால் இல்லை, அது கம்மா கரையில் உள்ளது. புறம்போக்கு நிலம் என்பது அரசுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால் சரிதான். அதனை நான் உரிமை பெற முடியாது என்றால் சரியல்ல.

2. சரஸ்வதி வீடு காலிமனை எனது வீட்டிற்கு வடக்கே உள்ளதா என்றால் சரஸ்வதி வீடு இல்லை. தனலட்சுமிக்கு இடம் உள்ளதா என்றால் எங்கள் வீட்டிற்கு பின்னாலும் கிழக்கேயும் உள்ளது. எனது வீட்டிற்கு அருகில் ராமு வீடு உள்ளது என்றால் இல்லை. மணி வீடு உள்ளதா என்றால் வீடு இல்லை, காலி இடம்தான் உள்ளது. முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைதான் போலிசா் விசாரணையில் சொல்லிஉள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் நரிக்குடி மருத்துவமனைக்கு இரவு 9மணிக்கு சென்றேன், நரிக்குடியில் 1மணி நேரம் இருந்தோம், நரிக்குடியில் இருந்து ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை மருத்துவமனைக்கு சென்றோம். அருப்புக்கோட்டை மருத்துவமனையில் மருத்துவர் இருந்தாரா என்றால் இருந்தார். அவரிடம் எனக்கு ஏற்பட்ட காயத்தை

பற்றி சொன்னேனா என்றால் ஆமாம். எங்கே என்னை எதை வைத்து அடித்தார்கள் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். வாக்குமூலத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். எனது மனைவியும் ஒரு கையொப்பம் செய்தார். நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. இளவர் அர்விந்த்தை நானும் எனது மனைவியும் இளவர் என்றும் பாராமல் அசிங்கமாக பேசினோம் என்றும் அதை அவனுடைய அப்பா, அம்மா கேட்டதால் அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. பனைமரம் பொதுவான மரம் என்றால் சரியல்ல. புறம்போக்கு மரம் என்பதால் யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றால் சரியல்ல.எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.